# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,920—1970 අගෝස්තු 21 වැනි සිකුරාදා—1970.8.21

14,920 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. | - |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 463 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 464 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 467 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 466 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1970 இன் இல. 238*

*எண். டி. 201/டீஜஎஸ்சி*

*தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்ச்சி*

*கீழ்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் தற்காலிக கேர்ணல் ஆகக் கடவர்.*

*லெவ்தினன்ற் கேர்ணல் டொனல்ட் டெனிஸ்டர் கேவாகம, சி. ஏ.ஜி.எஸ். சி.*

*அதி உத்தமரின் ஆணைப்படி,*

*ஏ. ஆர். ரத்னவேல்,*
*பதில் நிரந்தரச் செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1970, ஒகத்து 8*

*8-647*

*1970 இன் இல. 239*

*எண். டி. 21/ஆர்ஈசிரி/461*

*தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்*

*கீழ்க்குறிக்கப்பட்ட அலுவலர் 1970, நவம்பர் 16 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுகிறார்.*

*மேஜர் கிருபாநந்தன் இராஜநாதன், சி. ஈ.*

*அதி உத்தமரின் ஆணைப்படி,*

*ஏ. ஆர். ரத்னவேல்,*
*பதில் நிரந்தரச் செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1970, ஒகத்து 8*

*8-646*

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சகப் பகுதி,*
*கொழும்பு,*
*1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.*

**எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

1970 இன் இல. 240

எண். டி. 250/ஆர்ஈசிரி/3 (III)

## தரைப்படை—நிரந்தரைப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவி ஏற்றங்கள்

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர்கள் அவ்வவர்களது பெயர்களுக்கு எதிரே கொடுக்கப்பட்டிருக்கும் திகதிகளிலிருந்து மேஜேர்ஸ் ஆகக் கடவர் :—

கப்ரின் (தற்காலிக மேஜர்) துவிப்சிங் உபவன்ச வீரசிங்க, சி. ஏ.—1968, சனவரி 28.
கப்ரின் (தற்காலிக மேஜர்) பிரசன்ன குணசீலு சேப்பால பண்டித தகநாயக்க, சி. எஸ். ஆர்.—1968, பெப்ருவரி 8.
கப்ரின் (தற்காலிக மேஜர்) மாப்பிற்றியகே சரத்சந்திர விஜேசிங்க, சி. ஈ.—1969, யூன் 1.
கப்ரின் (தற்காலிக மேஜர்) நொலஸ்கோ எவறிஸ்ரஸ் றன்ஸ்பட் மாட்டின், சி. ஈ.—1968, ஒற்ரோபர் 21.
கப்ரின் (தற்காலிக மேஜர்) வீரவரண ஜயசூரிய தொட்டகே குமாரபால பர்ஞந்து, சி. எஸ். சி.—1968, ஒற்ரோபர் 21.
கப்ரின் (தற்காலிக மேஜர்) ஹர்பட் ஜெராட் பீரிஸ் விஜேசிங்க, சி. ஈ.—1968, நவம்பர் 11.
கப்ரின் (தற்காலிக மேஜர்) ஹெற்றியாராச்சி கிறேஷயன் ஹெறி குணவர்த்தன, சி. ஈ.—1968, நவம்பர் 18.
கப்ரின் (தற்காலிக மேஜர்) டொன் வில்மட் ஹப்புஆரச்சி, சி. எஸ். ஆர்.—1969, சனவரி 2.
கப்ரின் (தற்காலிக மேஜர்) லியனகே குணசோம சிகேரா, சி. ஏ. ஓ. சி.—1969, சனவரி 2.
கப்ரின் (தற்காலிக மேஜர்) மகாதேவன் கந்தையா, சி. எஸ். ஆர்.—1969, சனவரி 2.
கப்ரின் (தற்காலிக மேஜர்) ஜயந்த ஐவன் த சில்வா ஜயரத்ன, சி. ஏ.—1969, சனவரி 26.
கப்ரின் (தற்காலிக மேஜர்) அபய ஹுலங்கமுவ, சி. எல். ஐ.—1969, சனவரி 26.
கப்ரின் (தற்காலிக மேஜர்) மரக்கலகே விஜித குருகுலசூரிய, சி. ஏ. ஜி. எஸ். சி.—1969, மார்ச் 17.
கப்ரின் (தற்காலிக மேஜர்) லொக்குலியனகே கிளெமென்ற் ஜோன் கப்றுல், சி. ஈ.—1969, ஏப்பிரல் 1.
கப்ரின் (தற்காலிக மேஜர்) சோமசிரி விக்கிரமசிங்க, சி. ஈ.—1969, ஓகத்து 1.
கப்ரின் (தற்காலிக மேஜர்) சாமர்ஸ் ஹில்ற்றன் பர்ஞந்து, சி. ஏ. சி.—1969, ஓகத்து 8.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு ஓகத்து மீ 8 ந உ.
8–645

---

*1970 இன் இல. 241*

*எண். டி. 250/ஆர்ஈசிரி/1*

### *தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றங்கள்*

*கீழ்க் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் 1970, ஏப்பிறல் 1 ஆம் திகதி தொடக்கம் லெவ்ரினன்ற்ஸ் ஆகக் கடவர் :—*

*செக்கன்ட்—லெவ்ரினன்ற் மில்ரேய் றெறன்ஸ் செனவிரத்ன, சீ. எஸ். சீ.*

*செக்கன்ட்—லெவ்ரினன்ற் கஸ்தூரி ஆரச்சிகே ஞானவீர, சீ. எஸ். சீ.*

*செக்கன்ட்—லெவ்ரினன்ற் அல்பிரட் ஏர்ணெஸ்ற் தோமஸ் பெரோா, சீ. எஸ். சீ.*

*அதி உத்தமனுரின் ஆணைப்படி,*

*ஏ. ஆர். ரத்னவேல்,*
*பதில் நிரந்தரச் செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1970, ஓகத்து 11.*

*8-659*

*1970 இன் இல. 242*

*எண். டி./வி. எவ்./18/ஏ. (iv)*

### *இலங்கை அரச கடற்படை—தொண்டர் கடற்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணையமர்வு துறத்தல்*

*1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இலங்கை அரச கடற்படையின் தொண்டர் கடற்படையில் உள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள அலுவலரின் அரசாணையமர்வு துறத்தலை அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்.*

*சப்—லெவ்ரினன்ற் ஆர். என். ஆசீர்வாதம், இலங்கை அரச கடற்படையின் தொண்டர் கடற்படை.*

*அதி உத்தமனுரின் ஆணைப்படி,*

*ஏ. ஆர். ரத்னவேல்,*
*பதில் நிரந்தரச் செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1970, ஓகத்து 6.*

*8-660*

---

## நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 244

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செய்யப்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. சி. பி. வல்கம்பாய .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, களுத்துறை | 1970, ஓகஸ்ட் 4 லிருந்து | களுத்துறை மாவட்ட நீதிமன்ற 2904 இலக்க வழக்கின் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. ஆர். சில்வா .. | எண்ணின்மிக்க உத்தியோகத்தரும் மேலதிக நீதவான் முதலியனவும், அவிசாவளை | 1970, ஓகஸ்ட் 3 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. எம். எஸ். எஸ். கொரியா .. | அனுராதபுர மேலதிக மாவட்ட நீதிபதி, பொலனறுவை முதலிய இடங்களில். | 1970 ஓகஸ்ட் 6 லிருந்து | திரு. ஏ. எச். ஈ. மொலமுரே இல்லாத காலங்கள் |
| திரு. எம். பி. விஜசிங்க .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, அனுராதபுரம் | 1970, ஓகஸ்ட் 6 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. என். ஜே. வி. கூரே .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970, ஜூலை 21 .. | திரு. என். பி. டி. எஸ். விஜசேகர இல்லாத காலம் |
| திரு. எச். ஈ. விஜதுங்க .. | ஷை .. | 1970, ஜூலை 22 .. | ஷை |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செய்யப்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எஸ். சுரவீர .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கேகாலே | 1970, ஜூலை 28, 29 .. | திரு. கே. சி. ஈ. டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. பி. ஜி. சில்வா .. | மேலதிக நீதவான் முதலியன, அவிசாவளை | 1970, ஜூலை 31 விருந்து ஓகஸ்ட் 3 வரை | திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் இல்லாத காலங்கள் |
| திரு. எவ். வி. எச். லப்ரூய் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலியா | 1970, ஓகஸ்ட் 5 விருந்து 7 வரை | திரு. எம். சண்முகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. டி. பி. பி. மகாடியுல்வெவ .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, அனுராதபுரம் | 1970, ஜூலை 30 ம், ஓகஸ்ட் 4 ம், 5 ம் | திரு. டி. டபிள்யு. கே. லத்துவஎற்றி இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். நடராஜா .. | ௸ .. | 1970, ஜூலை 31 விருந்து ஓகஸ்ட் 3 வரை | ௸ |
| திரு. ஜே. எஸ். ராஜபக்ச .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம்—புத்தளம் | 1970, ஜூலை 31 விருந்து ஓகஸ்ட் 4 வரை | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. பி. மகேஸ்வரன் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலியா | 1970, ஓகஸ்ட் 2 .. | திரு. ஜே. பி. சி. சுவரிஸ் இல்லாத காலம் |
| திரு. எம். எச். கரீம் .. | கொழும்பு மேலதிக நீதவான் முதலியன, நாரஎன்பிட்டியில் | 1970, ஓகஸ்ட் 7 .. | திரு. ஏ. சைமன் சில்வா இல்லாத காலம் |
| திரு. எஸ். கனகரட்ணம் .. | மேலதிக நீதவான் முதலியன, யாழ்ப்பாணம் | 1970, ஓகஸ்ட் 3 | திரு. ஜே. ஜே. எவ். ஏ. டயஸ் இல்லாத காலம் |
| திரு. ஏ. என். டீ. சில்வா .. | மேலதிக நீதவான் முதலியன, பாணந்துறை | 1970, ஓகஸ்ட் 7 .. | திரு. ஜி. ஜி. டி. டீ சில்வா இல்லாத காலம் |
| திரு. டி. பி. ரணசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, கம்பஹ .. | 1970, ஜூலை 29, 30 .. | திரு. ஜே. சி. ஏ. சி. எம். எஸ் சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. எல். டபிள்யு. பெர்னாண்டோ .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, கம்பளை முதலிய இடங்களில் | 1970, ஓகஸ்ட் 7 விருந்து 10 வரை | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஈ. விஜதுங்க .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970, ஜூலை 29 .. | திரு. ஆர். எல். டீ சில்வா இல்லாத காலம் |
| திரு. எஸ். எம். முஸ்தபா .. | மேலதிக நீதவான் முதலியன, கண்டி .. | 1970, ஜூலை 31 .. | திரு. எவ். ஜி. பி. பெர்னாண்டோ இல்லாத காலம் |
| திரு. பி. வி. சேனாதிராஜா .. | மேலதிக நீதவான் முதலியன, வவுனியா .. | 1970, ஓகஸ்ட் 9 விருந்து 11 வரை | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. என். சி. ராஜபக்ச .. | தேவமிதி அற்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஜூலை 21, 22 .. | திரு. சி. ஏ. எஸ். ஈ. கிறிஸ்பின் இல்லாத காலங்கள் |
| திருமதி எம். ஜி. திசநாயக்க .. | குருவிடிக்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஜூலை 27 | திரு. ஏ. எல். எம். பெர்னாண்டோ இல்லாத காலம் |
| திரு. ஏ. எவ். எச். டீ அல்விஸ் .. | கங்கபொடப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஜூலை 26, 27 .. | திரு. எவ். ஜி. பி. பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. டி. ஜயசிங்க .. | கல்பொடக்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஜூலை 29 ம், 30ம் | திரு. ஜே. டபிள்யு. பி. உடலகம இல்லாத காலங்கள் |
| திரு. பி. குமாரநாயகம் .. | கோடியார்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஓகஸ்ட் 10 விருந்து 13 வரை | திரு. எஸ். ரி. ராஜரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. ஜே. சாகீட் .. | றைகம்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஓகஸ்ட் 5, 12, 13 | திரு. என். வி. ரி. மென்டிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஏ. ஈ. பின்ரோ .. | பிற்றிகல்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஜூலை 27 .. | திரு. பி. ஜே. எஸ். ஏ. பெரேரா இல்லாத காலம் |
| திரு. எஸ். ஜி. பி. ஜயதிலக்க .. | உடுகின்ட முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஓகஸ்ட் 6 விருந்து | வெலிமடை ஊர்நீதிமன்ற 7121, 7124, 7136, 7137 இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. பி. வி. சேனாதிராஜா .. | வவுனியா தெற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஓகஸ்ட் 10, 11 .. | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. எல். மலவான .. | கடவத்தக்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஓகஸ்ட் 10 .. | திரு. டபிள்யு. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்க .. | பாததும்பர முதலியவற்றின் ஊர்நீதிமன்ற மேலதிகத் தலைவர் | 1970, ஓகஸ்ட் 24 விருந்து | வலள்ள ஊர்நீதிமன்ற 6194 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | கல்கமுவ காரியாதிகாரிப் பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஓகஸ்ட் 7, 8 | திரு. எம். எம். பெரேரா இல்லாத காலங்கள் |
| செல்வி ஐ. எம். எஸ். கொடகும்புர .. | அட்டக்களன்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970, ஓகஸ்ட் 14, 17 .. | திரு. சி. பி. உனுகும்புர இல்லாத காலங்கள் |
| திருமதி எம். ஜி. திசநாயக்க .. | ௸ .. | 1970, ஓகஸ்ட் 18 | ௸ |
| திரு. எஸ். ஏ. யற்றவர .. | மாத்தளை தெற்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்ற மேலதிக தலைவர் | 1970, ஓகஸ்ட் 25 விருந்து | வாரியப்பொல ஊர்நீதிமன்ற 1598 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 573, கொழும்பு 12,
11.8.1970.

எஸ். அமரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

8–666/1

## நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நீக்கப்பட்ட நியமனம்

இல. : பி.எல். /டி.11/63.

1970, ஜூலை 26 திரு. ஜி. எச். ஜி. எவ். என். டீ சில்வா இல்லாத காலத்திற்கு பெந்தோட்ட–வலல்ளாவிதிக்கோறளை முதலியவற்றின் ஊர்நீதியனறப் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட திரு. டபிள்யு. ஓ. ஏ. டி சில்வாவின் நியமனம் நீக்கப்பட்டுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 573, கொழும்பு 12,
11.8.1970.

எஸ். அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

8–666/2

## அரசாங்க அறிவித்தல்கள்

என் : பி. ஆர். /ஏ. எவ். /98.

மாண்புமிக்க பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள், 1970, யூலை மாதம் 1 ஆம் திகதியிலிருந்து கொழும்பில் பின்லாந்தின் கௌரவ காவற்றூதராக திரு. ஜெ. டி. ஹிக்ஸ் அவர்களைக் கணிப்பதிற் களிப்படைந்துள்ளார். தனது நியமனத்தைத் துறந்த திரு. ஆர். ஏ. ஜீ. மக்மிஷென் அவர்களின் இடத்திற்கு திரு. ஹிக்ஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சு,
மூதவைக் கட்டடம்,
கொழும்பு,
1970, ஓகத்து 10.

8-566

---

ச. வ. பி. 7/63

### 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் 16 ஆ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதி அமைச்சர், நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், "பௌத்த இளைஞர் சங்கம் கொலன்னுவ" யை அப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1970, ஓகத்து மாதம் 10 ஆந் தேதி.

8-668

---

### 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

#### 49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி வீடமைப்பு நிர்மாண அமைச்சர், பீட்டர் ஜெரால்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி, அரசாங்கத்தினுற் சுவீகரிக்கப்பட வேண்டும் என இதனுல் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,
1970, யூலை 31.

#### அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பிரிவினுள்ள வண்ணுர் பண்ணைக் கோவிற் பற்று, வண்ணுர் பண்ணை மேற்கில் அமைந்துள்ளதும், நில அளவையாளரான ரீ. கந்தையா அவர்களாற் தயாரிக்கப்பட்டு 21/10/66 ம் தேதியிடப்பட்ட 3023 ம் இலக்க நில அளவைப் படத்தின் பிரகாரம் 1 பரப்பு 09½ குழிகள் விஸ்தீரணமுள்ள "பறையடி" என அழைக்கப்படுகின்றதுமான காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : பொது வேலைத் திணைக்கள ரோட்டு ;
கிழக்கு : வகாப்பின் மனைவியாரான எசிமாவின் ஆதனம் ;
தெற்கு : சுல்தான் மொஹிடீன் நாச்சியாவின் ஆதனம் ;
மேற்கு : மீரா மொஹிடீன் மனைவியாரான சாய்பூவின் ஆதனம்.

8-557

---

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவின்படி, தனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பிறப்பர் ஏற்றுமதித் தொழில் சம்பளச் சபை இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட சபையின் தீர்மானங்களை மாற்ற உத்தேசிக்கிறதென்று அக்கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கிறது.

மேற்கூறிய உத்தேசத்திற்கு ஆட்சேபனைகள் 1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 4 ந் தேதி பகல் 12 மணிவரைக்கும் இச்சபையின் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக் கொண்டதாய் எழுத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

டப்ளியூ. எல். பீ. டீ. மெல்,
தலைவர்,
இறப்பர் ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபை.

கொழும்பு, 1970 ம் ஆண்டு ஓகஸ்ற் மீ 10 ந உ.

#### அட்டவணை

இறப்பர் ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1945 ம் ஆண்டு யூலை மாதம் 21 ந் தேதி வெளிவந்த 9,436 ம் இலக்க அசாதாரண வர்த்தமானிதிற் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, 1967 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 14,772/1 ம் இலக்க அசாதாரண வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலினகத்தே குறிக்கப்பட்டவாறு கடைசியாக மாற்றப்பட்ட தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ம் பாகத்தில் "அரசாங்க விடுமுறைகள்" என்ற உப தலைப்பின் கீழ் 1 (அ) ம் பந்திக்குப் பதிலாக, பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் வேண்டும்மேலும் மாற்றப்படுதல்வேண்டும் :—

" அரசாங்க விடுமுறைகள்

1. (அ) இப் பந்தியினதும், 2 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளிகள் யாவருக்கும் 1965 ம் ஆண்டின் 17 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கமைய, பின்வரும் அரசாங்க விடுமுறைகளை வேதனத்துடன் கூடிய விடுமுறைகளாக அனுமதித்தல் வேண்டும் :

(1) தேசிய வீரர் தினம் (சனவரி 1) ;
(2) தமிழ்த் தைப்பொங்கல் தினம் ;
(3) சுதந்திர நினைவு தினம் (பெப்ருவரி 4 ந் தேதி) ;
(4) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கு நேரே முந்திய தினம் ;
(5) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினம் ;
(6) மே தினம் (மே 1) ;
(7) சிங்கள விசாக மாதத்தின் பூரணைத் தினத்திற்கு நேரடுத்து வரும் தினம் ;
(8) மீலா துன் நபி (நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த திருநாள்) ;
(9) நத்தார் தினம்."

8–673

### இணக்கச் சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேடகசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப் படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத் தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளு மன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், நுவரேலியா மாவட்டத்திலுள்ள திஸ்பனைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவர் பதவியி லிருந்து விலகிய, வட்டத்தறையைச் சேர்ந்த உக்கு பண்டா திசா நாயக்க அவர்களுக்குப் பதிலாக கம்பளை, வட்டத்தறையைச் சேர்ந்த பண்டிதரத்தின ஸ்ரீ வியனவாராச்சி அவர்களை மேற்குறிப் பிட்ட குழாத்தின் உறுப்பினராகப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராகவிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ஆகத்து 7 ஆந் நாள்.

8-554/1

---

### இணக்கச் சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேடகசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப் படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத் தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட் டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன் றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், புத் தளம் மாவட்டத்திலுள்ள காக்காபள்ளிக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவர் பதவியி லிருந்து விலகிய, தெமட்டப்பிட்டியைச் சேர்ந்த மதுராவலகே தொன் ஜோசப் பென்ரலியன் பெரோரா அவர்களுக்குப் பதிலாக மாதம்பை கருக்குவையைச் சேர்ந்த கெந்திரிக் சிங்கோ குணரத் தின அவர்களை மேற்குறிப்பிட்ட குழாத்தின் உறுப்பினராகப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராகவிருக்க இத்தால் நியமிக் கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ஆகத்து 6 ஆந் நாள்.

8 554/2

---

### இணக்கச் சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேடகசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப் படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத் தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக் கச் சபைகள் சட்டத்தின் 3 (7) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், திரு கோணமலை மாவட்டத்திலுள்ள முள்ளிப்பொத்தானைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் பின் வரும் உறுப்பினர்களை இத்தால் பதவியிலிருந்து அகற்றுகின் றேன் :—

1. கந்தளாய், சாலையபுரம், கந்தளாய் விகாரை வாசியாகிய வண. ஏ. சீலானந்த தேரோ.
2. தம்பலகாமம், கல்மெற்றியாவைச் சேர்ந்த திரு. எச். டீ. தேவையா.
3. கல்மெற்றியாவைச் சேர்ந்த திரு. பீ. ஏ. வாரிசிங்க.
4. கந்தளாய், கல்மெற்றியாவைச் சேர்ந்த திரு. யூ. சீ. சோமபால.
5. கந்தளாய், பரவிப் பஞ்சனைச் சேர்ந்த திரு. ஆர். எம். குண திலக.
6. தம்பலகாமம், மேற்குக் குடியேற்றத்தைச் சேர்ந்த திரு. எம். அலி அக்பர்.
7. தம்பலகாமம், மேற்குக் குடியேற்றம், 17 வது கூறைச் சேர்ந்த திரு. டபிள்யூ. எம். நம்பண்டா.
8. முள்ளிப்பொத்தானை, 334 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. ஏ. ரீ. கே. மஸ்தான்.
9. முள்ளிப்பொத்தானை, 96 ஆம் கட்டையடியைச் சேர்ந்த திரு. எல். எச். ஆரியரத்ன.
10. கயன்வடி, 374 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். எம். மொகமட் சுல்தான் ஹஜ்ஜியார்.
11. முள்ளிப்பொத்தானை, 182 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. எம். டீ. யசபால.
12. முள்ளிப்பொத்தானை, 823 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. கே. நாகரத்தினம்.
13. முள்ளிப்பொத்தானை, 1116 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து காளியப்பு.
14. முள்ளிப்பொத்தானை, 1060 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. கே. சித்திரவேலு.
15. கந்தளாய், 10 ஆம் கூறிலுள்ள 1145 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. அப்துல் வகப் அப்துல் குதூஸ்.
16. கந்தளாய், 10 ஆம் கூறிலுள்ள 1031 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. எம். அப்துல் அசீஸ்.

இ. விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ஆகத்து 7 ஆந் நாள்.

8-554/3

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### யாத்திரிகை விதிமுறை

#### வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திருவிழா—1970
#### திருகோணமலை மாவட்டம்

இக்கோவில் திருவிழாவிற்குச் சமுகம்கொடுக்கும்படி யாத்திரிகட் கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கட்கும் அறிவிப்பது யாதெ னில், மேற்கூறிய ஆலயத் திருவிழா 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ம் திகதி ஆரம்பமாகி 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ம் திகதி முடிவடையும்.

இதில் பங்குபற்றும் யாத்திரிகர்கட்கும் மற்றும் இதிற் சம்பந்தப் பட்டவர்கட்கும் 1966 ம் ஆண்டு ஆவணி மாதம் 2 ம் திகதி 9,508 ஆம் இலக்கங் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் விதிகள் ஆலயத் திருவிழா முடியும்வரை அமுலில் இருக்கும்.

டபிள்யூ. எல். பேர்னாந்து,
அரசாங்க அதிபர்,
திருகோணமலை மாவட்டம்.

கச்சேரி,
திருகோணமலை,
1970.8.11.

8-664

---

### 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் கீழ்

1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் III ம் பாகத்தின் "இ" என்னும் தலைப்பின் கீழ் வரும் 4(3) ம் பிரமாணத்தின் படி 25 வது தொடர்ச்சி அரிசிப் பங்கீட்டுப் புத்த கங்கள் 1970 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 24 ம் திகதி திங்கட்கிழமை அமுலுக்கு வருமென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படு கின்றனர். ஆகவே 25 வது தொடர்ச்சி அரிசிப் பங்கீட்டுப் புத்த கத்தில் 1 என்னும் இலக்கம் இடப்பட்ட கூப்பன் 1970 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 24 ம் திகதி தொடங்கும் கிழமைக்கு வலிமையுடை யது. 2 என்னும் இலக்கமிடப்பட்டிருக்கும் கூப்பன் 1970 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 31 ம் திகதி தொடங்கும் கிழமைக்கு வலிமையுடைய தாயும், இவ்வண்ணமே நடைமுறையிலிருக்கும்.

பி. பி. வி. ஏ. ஜே. பி. சேனாரத்ன,
உணவுக் கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 12 ந் திகதி.

8-657

## கொழும்பு மாவட்டத்தில் கால்நடைகளுக்குக் குறிசுடுதல் சம்பந்தமான 1969–70 ம் வருடத்திற்குரிய கால அட்டவணை

1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ம் திகதி வெளியான இலக்கம் 13,406 கொண்டுள்ள அதிவிசேஷமான வர்த்தமானப் பத்திரிகையில் (தமிழ் மொழியில்) வெளியிடப்பட்ட கால்நடைகளுக்குக் குறிசுடுதல் சம்பந்தமான நீதித் தொகுப்பின் 12 (iii) ன் பிரிவின்படி கொழும்பு மாவட்டத்தில் ஹாபிட்டிகம் கோறளே பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் 1969–70 ம் வருடத்தில் கால் நடைகளுக்குக் குறிசுடுதற்கான கால அட்டவணை பொது மக்களின் கவனத்திற்காக கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது :—

அரசாங்க அதிபர் காரியாலயம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 11 ந் உ.

டி. டபிள்யூ. த அல்விஸ்,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

| கிராம சேவகர் இலக்கமும் பிரிவும் | குறிசுடப்படும் நிலையம் | திகதி |
|---|---|---|
| 1–2 —கொடகலான .. | .. " அளுத்வத்த ", லோலுவாகொட .. .. | .. 70.8.17 |
| | கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திற்கு அண்மையில் .. | .. 70.8.18 |
| 3 —தெல்வல .. | .. " மாவத்தஹேன ", தெல்வல .. .. | .. 70.8.17 |
| | " கொஸ்வத்த ", நால்ல .. .. .. | .. 70.8.18 |
| | " பறணவத்த ", நால்ல .. .. .. | .. 70.8.19 |
| 4 —மாலதெனிய .. | .. " கஹட்டகஹவத்த ", அலபிட்டியாவ .. .. | .. 70.8.17 |
| 5–6–7—ஹேன்கம .. | .. " கோன்கஹமுல் வத்த ", மீணிஓலுவ .. .. | .. 70.8.17 |
| | " பின்னகொல்ல வத்த ",கண்டவல .. .. | .. 70.8.18 |
| | " மஹவத்த ", ஹக்குறுகும்புற .. .. | .. 70.8.19 |
| 8 —முகுறுகம்பல .. | .. " கேலியகஹவத்த ", முகுறுகம்பல .. .. | .. 70.8.18 |
| | " பன்சல்வத்த ", முகுறுகம்பல .. .. | .. 70.8.19 |
| 9 —புறுன மீரிகம | .. " போமலுவ வத்த" புறுன , மீரிகம .. .. | .. 70.8.19 |
| | " கொடல்லவத்த ", இகழ மீரிகம .. .. | .. 70.8.20 |
| 10 —வல்போத்தலே | .. " கஹட்டகஹவத்த " .. .. .. | .. 70.8.19 |
| 11 —மதுறுபிட்டிய .. | .. " அரலியகஹவத்த ", ஹப்புகஹகெதற .. .. | .. 70.8.18 |
| | " லெச்சேவத்த ", கடிகமுவ .. .. | .. 70.8.19 |
| 12 —கீனதெனிய | .. " னவனிலியவத்த ", பஜ்ஜன்கொட .. .. | .. 70.8.20 |
| | " கொஸ்வத்த ", தென்னகம .. .. | .. 70.8.21 |
| 13 —மாகூற .. | .. " காலேவத்த ", தலகம .. .. .. | .. 70.8.21 |
| | " குக்குல்வத்த ", பலதவ .. .. | .. 70.8.22 |
| 14 —போதலே பஹழகம | .. " போகஹம்விட்ட ", போதலே ,பஹலகம .. .. | .. 70.8.21 |
| 15எ —போதலே இகழகம | .. " கிராம சேவகர் கந்தோர் வத்த " .. .. | .. 70.8.21 |
| 15 —தவலபிட்டிய .. | .. " கேகுணகஹ ஓவிற்ற ", தவலம்பிட்டிய .. .. | .. 70.8.21 |
| | " பஹழ கொட்டுவ ", வில்வத்த .. .. | .. 70.8.22 |
| 15எ —நெலிகம .. | .. " கிராம சேவகர் கந்தோர் வத்த " .. .. | .. 70.8.22 |
| 16 —விந்தற .. | .. கிராம சேவகர் கந்தோர் வத்த, கனுகம .. .. | .. 70.8.22 |
| 17 —பொஹொன்னறுவ | .. " வெல்மடுவ இடம " பொகொன்னறுவ .. .. | .. 70.8.22 |
| 18 —பல்மட .. | .. கிராம சேவகர் கந்தோர் வத்த-பல்மட .. .. | .. 70.8.24 |
| | கமகேவத்த, ஹந்துறுமுல்ல .. .. | .. 70.8.25 |
| 19 —ஹேனேபொல | .. " அலவத்தன்ன ", ஹீதியவல .. .. | .. 70.8.24 |
| | " கஹட்ட கஹவத்த ", ஹேனேபொல .. .. | .. 70.8.25 |
| 20 —வேவல்தெனிய இகழகம | .. " கம்பிகொட்டுவ ", வேவல்தெனிய சந்தி .. .. | .. 70.8.25 |
| 20எ —வேவல்தெனிய பகழகம | .. " பல்லெந்த ", வேவல்தெனிய பகழகம .. .. | .. 70.8.25 |
| 21/22 —மடபாவிட்ட .. | .. " மெனேறிவத்த ", தன்ஓவிற்ற .. .. | .. 70.8.26 |
| | " பன்சல்வத்த", மடபாவிற்ற .. .. | .. 70.8.27 |
| | " மஹபிட்டியவத்த ", அறுக்கொட .. .. | .. 70.8.28 |
| 23 —கொட்டதெனிய | .. " மாவத்தகும்புற ", கொட்டதெனிய .. .. | .. 70.8.29 |
| | " அம்பில்ல ஓவிற்ற ", வேறகொட .. .. | .. 70.8.30 |
| 24 —முறுத்தவல | .. " அனிகட் வத்த ", முறுத்தவல .. .. | .. 70.8.24 |
| 25 —ஹாபிட்கம .. | .. " கல்பொலலியத்த வத்த ", ஹாபிட்டிகம .. .. | .. 70.8.24 |
| 26/27 —கல்எலிய பல்லேவல | .. " மிரிஸ்வத்த ", கல்எலிய, பல்லேவல .. .. | .. 70.8.25 |
| | " நெசவு நிலையத்தின் அருகாமை ", உடவெல .. | .. 70.8.26 |
| 28 —மல்லாஹேவ .. | .. " குருந்துவத்த ", மல்லேஹேவ .. .. | .. 70.8.26 |
| 28எ —வெல்ல விலமுல்ல | .. " தெவெட்டகஹவத்த ", வெல்லவிலமுல்ல .. .. | .. 70.8.26 |
| 29/30 —மிதெல்லவல | .. " ஹிறிதல லந்த ", வல்போலான .. .. | .. 70.8.26 |
| | " தெனியகெலே ", பலலேவல .. .. | .. 70.8.27 |
| | " ஹப்புகஹவத்த ", வேறகொட .. .. | .. 70.8.28 |
| 31 —போகலகம்–அம்பலன்வத்த | .. " நெகத்திகேவத்த ", அம்பலன்வத்த .. .. | .. 70.8.28 |
| | " கிராம சேவகர் கந்தோர் வத்த " .. .. | .. 70.8.29 |
| 31எ —பொகலகம இகழ | .. " கிராம சேவகர் கந்தோர் வத்த " .. .. | .. 70.8.28 |
| | " நாகஹவத்த", பெலபிட்டிகம .. .. | .. 70.8.29 |
| 32 —குக்குல்நாபே | .. " கோங்கஹவத்த ", குக்குல்நாபே .. .. | .. 70.8.29 |
| | " பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காணி ", கல்கான .. | .. 70.8.30 |
| 33 —ஹங்சாபொல | .. " இலுக்கொல்ல வத்த ", ஹங்சாபொல .. .. | .. 70.8.28 |
| | " தெலகஹவதத ", மததகய .. .. | .. 70.8.29 |

| கிராமசேவகர் இலக்கமும் பிரிவும் | குறிசுடப்படும் நிலையம் | திகதி |
|---|---|---|
| 34 —முத்தறகம | " தெல்கஹவத்த ", அரசாங்க காணி | 70.8.30 |
| 35 —கெப்பிடிவலான | " கூட்டுறவுச் சங்க காணி " | 70.8.30 |
| | " கெட்டகாலகஹவத்த ", பாந்துராகொட | 70.9.1 |
| 36 —கஸ்பே | " ஹப்புகஹவத்த ", கஸ்பே, பஹழகம | 70.8.30 |
| 37/38 —உடுஉல்ல | " கடேவத்த ", உடுஉல்ல | 70.8.30 |
| 39 —கொஸ்அட்டதெனிய | " கிராம சேவகர் கந்தோர்வத்த " | 70.9.1 |
| 40 —இந்திபறபே | " கஹட்டகஹவத்த ", அம்பன | 70.9.1 |
| | " நாபெகெலே ", கொட்டகன்த இடம, இந்திபறபே | 70.9.2 |
| 41 —பறண ஹல்பே | " தெவட்டகபடவத்த ", பறண ஹல்பே | 70.9.1 |
| 42 —ஹல்பே | பறண வத்த அல்லது பீகஹமுல்லவத்த | 70.9.2 |
| 43 —கித்துல்வல | " கிராம சேவகர் கந்தோர் வத்த " | 70.9.2 |
| 44 —வத்தேமுல்ல | " தெல்கஹலந்த ", கலுஅக்கல, பகழகம | 70.9.2 |
| | " போகஹவத்த ", வத்தேமுல்ல | 70.9.3 |
| 45 —குலிகெதற | " சியம்பலகஹமுல் வத்த " | 70.9.3 |
| 46 —மடித்தியவல | " மடித்தியவல வத்த ", மடித்தியவல | 70.9.3 |
| | " முடிக்குரிய காணி ", கலுஅக்கல, இகழகம | 70.9.4 |
| 47/48 —ஹங்கவத்த | " வடியாயகெலே வத்த ", றஸ்ஸபான | 70.9.3 |
| 49 —உல்லலபொல | " போகஹலந்த " | 70.9.4 |
| | " சியம்பலாகஹவத்த " | 70.9.5 |
| 50 —பலகல்ல | " கிராம அபிவிருத்திச் சங்கக் காணி " | 70.9.4 |
| 51 —குடகம்மன | " வத்துயாய நிலமே என்பவருடைய கொப்பரா உற்பத்தியாக்கும் இடத்திற்கு அண்மையில் | 70.9.4 |
| | " மஹஹேனவத்த ", குடகம்மன | 70.9.5 |
| 52 ஹெட்டிமுல்ல | " கிராம அபிவிருத்திச் சங்க காணி ", ஹெட்டிமுல்ல | 70.9.4 |
| | " எதிரிசூரியவின் தோட்டம் ", கெலகெதற | 70.9.5 |
| | " பெதன்கஹவத்த ", பொத்தேகெதற | 70.9.6 |
| | " கஹட்டகஹவத்த ", நாவான | 70.9.6 |
| 53எ —பறகொட | " வெலஉடவத்த ", பறகொட | 70.9.6 |
| | " ஓபடலந்த ", திகம்பல | 70.9.7 |
| 54 —சறபத்த | " பர்ச்சின்டன் வத்த ", கொட்டதெனியாவ | 70.9.6 |
| | " யக்கடவல வத்த " | 70.9.7 |
| 54 —பொல்வத்த | " பெறவல கட்டுவ வத்த ", பொல்வத்த | 70.9.9 |
| | " பறணவத்த ", மாணின்கமுவ | 70.9.10 |

8-581

## 1969/70 ம் வருடத்தில் கால்நடைகளுக்குக் குறிசுடல் தின அட்டவணை

1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ந் திகதி 13,406 இலக்கத்துடன் வெளியான (தமிழ் மொழியில்) வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கால்நடைகளுக்குக் குறிசுடுதல் சம்பந்தமான நீதித் தொகுப்பின் 12 (111) பிரிவின்படி கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளே மேற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவின் 1969/70 ம் வருடத்தில் கால்நடைகளுக்குக் குறிசுடும் தினங்கள் கொண்ட அட்டவணை பொது மக்களின் அறிவித்தலுக்காகக் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர் செயலகம்,
கொழும்பு,
1970 ம் ஆடு ஆகஸ்ட் மீ 11 ந் வ.

டி. டபிள்யூ. த அல்விஸ்,
கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

| கிராமசேவகர் இலக்கமும் பிரிவும் | குறிசுடும் நிலையம் | திகதி |
|---|---|---|
| 469/70—நவகமுவ/றணல் | வல்பிட்டிகொடவில் அமைந்துள்ள தெல்கஹவத்த | 70.9.1 |
| | றணலவில் அமைந்துள்ள தெல்கஹவத்த | 70.9.2 |
| | உந்துகொடவில் அமைந்துள்ள குருணன்செலாகேவத்த | 70.9.3 |
| 476 —மாலாபே | கிராமசேவகர் காரியாலயத்திற்கு அண்மையில், கல்பொத்தேவத்த | 70.9.1, 2, 3 |
| 480 —தெடிகமுவ | றக்மலகே வத்த | 70.9.1, 2, 3 |
| 484 —பிட்டிபன வடக்கு | வட பிட்டிபன அலுபோகஹ வத்த | 70.9.1, 2, 3 |
| 471 —போமீறிய இகழ | கிராம சேவகர் காரியாலய வளவு | 70.9.4, 5, 6 |
| 477 —தலங்கம வடக்கு | ஷை | 70.9.4, 5, 6 |
| 481 —ஹபறகட/முல்லேகம | ஷை | 70.9.4, 5, 6 |
| 484எ —பிட்டிபன தெற்கு | கலகாஹேன என்னும் காணி | 70.9.4, 5 |
| | கிராம சேவகர் காரியாலய வளவு | 70.9.6 |
| 472 —போமீறிய பகழ | ஷை | 70.9.7, 9, 10 |
| 478 —தலாஹேன | தலாஹேனவில் அமைந்துள்ள தெல்கஹவத்த | 70.9.7, 9, 10 |
| 482 —பனுகொட | கிராம சேவகர் காரியாலய வளவு | 70.9.7, 9, 10 |
| 485 —மாவத்கம | ஷை | 70.9.7, 9 |
| | உடுவன பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில் | 70.9.10 |
| 473 —கொத்தலாவல | கொத்தலாவலவில் அமைந்துள்ள கெற்றகெலகஹவத்த | 70.9.11, 12, 13 |
| 479 —தலங்கம தெற்கு | கிராம சேவக காரியாலய வளவு | 70.9.11, 12 |

| கிராமசேவகர் இலக்கமும் பிரிவும் | | குறிசுடும் நிலையம் | திகதி |
|---|---|---|---|
| 483 | —கொடகம | கிராமசேவக காரியாலயத்திற்கு அண்மையில் | 70.9.11, 12, 13 |
| 486 | —ஹோமாகம | கிராம சேவகர் காரியாலயத்திற்கு அண்மையில் அனுபோகஹவத்த | 70.9.11, 12, 13 |
| 474 | —ஹேவாகம | கெக்கிறிதெனியேவில் அமைந்துள்ள தெல்கஹலந்த | 70.9.14, 16 |
| | | கிராமசேவகர் காரியாலயம் அமைந்துள்ள தோட்டம் | 70.9.17 |
| 491 | —கலபலுவாவ | கிராம சேவகர் காரியாலய வளவு | 70.9.14, 16, 17 |
| 498 | —மாலபல்ல | மாகும்புற கல்மோல வத்த | 70.9.14, 16, 17 |
| 500 | —பிராமணகம-மாமுல்கொட | கிராம சேவகர் காரியாலயம் அமைந்துள்ள காணி | 70.9.14, 16, 17 |
| 475 | —வெலிவிட்ட | வெலிவிட்ட கம்மாலைக்கு அருகில் | 70.9.18 |
| | | வெலிவிட்ட கிராம சேவகர் காரியாலயத்திற்கு அருகில் | 70.9.19 |
| | | வெலிவிட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் | 70.9.20 |
| 492 | —பத்தரமுல்ல | கிராம சேவகர் காரியாலயம் அமைந்திருக்கும் காணி | 70.9.18, 19, 20 |
| 496ஏ | —கொட்டாவ வடக்கு | கிராம சேவகர் காரியாலயம் அமைந்திருக்கும் காணி | 70.9.18, 19, 20 |
| 499 | —ஹிரிப்பிட்டிய-நியந்தகல | கிராம சேவகர் காரியாலயம் அமைந்துள்ள காணி | 70.9.18, 19 |
| | | நியந்தகல மக்குலுகஹலந்த | 70.9.20 |
| 501 | —முல்லேறியாவ வடக்கு | கிராம சேவகர் காரியாலயம் அமைந்துள்ள காணி | 70.9.21, 23, 24 |
| 493 | —கலல்கொட-தலவத்துகொட | கலல்கொடவில் அமைந்துள்ள கொஸ்கஹலந்த | 70.9.21, 23, 24 |
| 496 | —கொட்டாவ தெற்கு | கொட்டாவ தெற்கு கொடபறகஹவத்த | 70.9.21, 23, 24 |
| 495 | —ஹோகந்தர தெற்கு | கிராம சேவகர் காரியாலயம் அமைந்துள்ள தெல்கஹவத்த | 70.9.21, 23, 24 |
| 502 | —முல்லேரியாவ உடுமுல்ல | உடுமுல்லவில் அமைந்துள்ள அஹந்திய பொகுணவத்த | 70.9.25, 27, 28 |
| 495 | —ஹோகந்தர வடக்கு | ஹோகந்தர வடக்கு, தாம்புகஹவத்த | 70.9.25, 27, 28 |
| 497 | —றுக்மலே | றுக்மலே சந்திக்கு அருகில் கொடபறகஹவத்த | 70.9.25, 27, 28 |
| 490 | —அத்துறுகிரிய | கிராம சேவகர் காரியாலயம் அமைந்திருக்கும் காணி | 70.9.25, 27, 28 |
| 503 | —முல்லேரியாவ ஹிம்புலான | முல்லேரியாவ கிராம சேவகர் காரியாலயம் அமைந்துள்ள காணி | 70.9.30, 70.10.1, 70.10.2 |
| 487/88 | —கொறதோட்ட-ஒறுவல | வனபொத்து முகலான என்னும் பெயருடைய காணி | 70.9.30, 70.10.1, 70.10.2 |
| 489 | —போறே | கல்கெட்டிய தருமக் கிணற்றிற்கு அண்மையிலுள்ள கல்கெட்டியவத்த | 70.9.30, 70.10.1 |
| | | திரு. வல்கமவிலுள்ள எல். டி. விக்கிரமதிலகவும் இன்னும் பலருக்கும் உரிமையாயுள்ள அட்டஅமுணகந்தஹேன | 70.10.2 |

8–580

## அரசாங்க விநியோகத் திணைக்களம்

### அறிவித்தல்

வருடாந்த இருப்புப் பரிசீலனை, கணக்கு முடித்தல் என்பவற்றின் காரணமாக அரசாங்க விநியோகத்திணைக்களம் 1970 செப்தம்பர் 23 ம் திகதி தொடக்கம் 1970 ஒக்டோபர் 6 ம் திகதி வரை (இரு திகதிகளும் உட்பட) விநியோகம் சம்பந்தப்பட்ட மட்டில் மூடப்பட்டிருக்கும்.

திறைசேரியின் 962/7/158 (சீரீஎஸ்/பி) 218 ம் இலக்கங் கொண்ட 1949.7.1 ஆந் திகதிய சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட காரணங்களுக்காக மட்டுமேயல்லாது மற்றும்படி 1970 ஆகஸ்டு 15 ம் திகதிக்குப்பின் பொருள் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்கப்படவில்லை என்பதைக் கவனிக்குமாறு திணைக்களத் தலைவர்களும், கேள்விப்பட்டியல் அனுப்புவோர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இது எனது எப்/எசீசீரீஎஸ்/சீ/ஐ இலக்கத்தைக் கொண்ட 1970 ஜூலை 30 ம் திகதிய கடிதத்தில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

(i) உடனடியாகப் பழுது பார்க்க வேண்டிய இயந்திரங்களும், இயக்கு கருவிகளும்.

(ii) வெள்ளப் பெருக்குக் காலங்களில் தேவைப்படும் பொருட்கள்.

(iii) தொற்று நோய் காலத்தில் தேவைப்படும் பொருட்கள்.

எஸ். ஏ. பீ. ரூபசிங்க,
அரசாங்க விநியோக அதிபர்.

கொழும்பு 2, 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 12 ந் உ.

8–709

---

## முதல் உதவிச் சிற்றிதழ்

### தொழில் அமைச்சு, இலங்கை

*கீறல்களும் சிறு காயங்களும்*

கீறல்களையும் சிறு காயங்களையும் உடனடியாகக் கவனித்துச் சிகிச்சை செய்துகொள்க. தாமதிக்கத் தாமதிக்கத் தொற்றும் அபாயம் மிகுதியாகும். கண்ணுக்குத் தோற்றும் புறப்பொருள்கள் எவையேனும் இருப்பின் அவற்றைப் பொறுக்கியோ துப்பரவான காயங்கட்டுதுணியால் துடைத்தோ அகற்றிவிடுக. காயங்களைக் கழுவுதலாகாது. தேவையாயின், சவர்க்காரமோ தகுந்த பிற திரவங்களோ கொண்டு காயத்தின் புறப்பக்கங்களைத் துடைத்துத் துப்புரவாக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

காயம் உள்ள இடப்பகுதிகளுக்குப் பிளேவின் பூசிக்கொள்க.

காயத்தின்மேல், திருத்திகரமான அளவினதாய், கிருமியழித்த கட்டுதுணி கட்டிக்கொள்க.

தேவையாயின், இந்தக் கட்டுக்குமேலே பஞ்சுத்துய் வைத்து ஒட்டுதுணிகொண்டு ஒட்டியோ கட்டுதுணி கொண்டு கட்டியோ விடுக.

*குருதி பாயுங் காயங்கள்*

முறிவு ஏற்பட்டிருக்கும் என்ற ஐயப்பாடு இருக்காவிடின், குருதிபாயும் பகுதியினை உயர்த்திவைத்துக்கொள்க.

உடையில் ஒரு சிறு பகுதியைத் தேவையான அளவுக்கு அகற்றி, காயத்தினை வெளியாகத் தெரியும்படி வைத்துக்கொள்க.

கண்ணுக்குத் தோற்றும் புறப்பொருள்கள் எவையேனும் இருப்பின் அவற்றைப் பொறுக்கியோ துப்புரவான காயங்கட்டுதுணி கொண்டு துடைத்தோ அகற்றிவிடுக.

குருதி எங்கேயாவது உறைந்திருந்தால், அதனைச் சுரண்டி அகற்றுதலாகாது. காயத்தைச் சுற்றியுள்ள பகுதித் தோலினைத் துப்புரவாக்கிக் கொள்க.

காயத்தின் மீது பொருத்தமான அளவுள்ளதாகக் கிருமியழித்த கட்டுதுணி கட்டிக்கொள்க.

காயம் உள்ள பகுதியின்மீது பஞ்சுத்துய் அல்லது கட்டுதுணி வைத்து ஊன்றி அமர்த்திப்பிடித்துக்கொண்டு, ஒட்டுதுணியால் ஒட்டியோ கட்டுதுணியாற் கட்டியோவிடுக.

காயத்தினுள்ளே கிருமிகள் புகுந்தால், குருதி நஞ்சேற்றத் தொற்று ஏற்படும். ஆதலால், எப்பொழுதும் கிருமியகற்றிய கட்டுதுணியே உபயோகித்தல் வேண்டும். கையினால் எடுத்து உபயோகித்தால் மருந்தூட்டிய பஞ்சுத்துணி கிருமியகற்றியதாய் இராது. கைகளிலே கிருமிகள் இருக்குமாதலால் காயங்களையோ காயத்தின் மீது வரும் கட்டுதுணிப் பகுதியினையோ கைகளால் தொடுதலாகாது.

தேவையான வேளைகளில் இயன்றளவு விரைவாக வைத்திய உதவிபெற்றுக் கொள்ளுதல்வேண்டும்.

எவ்வகையான காயங்களானாலும் ஈர்ப்புவலித் தடுப்புக்கான சிகிச்சை செய்துகொள்ளுதல் வேண்டும்.

*எரிகாயங்களும் சுடுகாயங்களும்*

எரிகாயத்தையோ சுடுகாயத்தையோ பொருத்தமான அளவுள்ளதான கிருமியழித்த எரிவுக் கட்டுதுணியால் மூடிவிடுக.

எரிவு காயங்களுக்கு, கிருமியழிக்காத எண்ணெய்வகை உபயோகித்தலாகாது. பின்னதாகச் செய்யும் வைத்திய சிகிச்சைக்கு அது இடையூறாய் இருக்கும்.

கொப்புளங்களைக் குத்திப் புட்டுவிடுதலாகாது.

அமில எரிகாயங்களும் கார எரிகாயங்களும்

அமிலம் : எரிகாயங்களின்மேல் குளிர்ந்த நீரினை நன்கு சொரிதல் வேண்டும். நீர் சொரிந்தபின் காயத்தின்மீது சோடியமிருகாபனேற்றுத் தூள் (அதாவது, அப்பச் சோடா) அல்லது சோடியங்காபனேற்று (அதாவது, சலவைச் சோடா) தூவிவிடுதல் வேண்டும்.

காரம் : நீறுத சுண்ணும்பு பட்டு ஏற்பட்ட காயமாயின், அதிலிருக்கும் சுண்ணும்புத் துகள்களை அகற்றிவிடுக.

எரிகாயத்தின்மீது குளிர்ந்த நீரினை நன்கு சொரிதல் வேண்டும். எலுமிச்சம்பழச் சாற்றிலோ வின்னுரியிலோ சமபங்காகத் தண்ணீர் கலந்து காயத்தின்மீது ஊற்றுக.

அமிலத்தால் ஏற்பட்டாலென்ன காரத்தால் ஏற்பட்டாலென்ன இருமியழித்த கட்டுத்துணிகொண்டு காயத்தைக் கட்டிக்கொள்க.

கண் மாசுறலும் கண்ணினுட் புறப்பொருள் புகுதலும்

கண் மாசுறல் : ஓடு நீரினுள் 15 நிமிடம்வரை கண்ணினைக் கழுவுக.

புறப்பொருள் : ஓடு நீரினுள் 15 நிமிடம்வரை கண்ணினைக் கழுவுக.

கழுவியகற்றமுடியாத புறப்பொருள்களை அகற்றமுயலுதலாகாது. அப்படிக்கொத்த வேளைகளில் வைத்திய உதவி உடனடியாகப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு : இவ்வகையான உபயோகங்களுக்கான ஓடுநீர் மேனேக்கிய தாரையாகவோ கண் ஊற்றுகவோ இருத்தல் நன்று என விதந்துரைக்கப்படுகின்றது.

முறிவுகள்—பொது விதிகள்

உடனடியாக, முறிவுகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுதல்வேண்டும். வேறு காரணங்களால் உயிருக்கு ஆபத்து இருந்தாலன்றி, முறிவு ஏற்பட்ட பகுதி அசையாதபடி கட்டப்படுமுன், முறிவுகாரரை அசைத்து இடம்பெயர்த்தலாகாது.

முறிந்த முனைகள் விலகிவிடாதபடி சுற்றிக் கட்டுகள் போட்டு உடனுடன் கட்டிவிடுதல் வேண்டும். கட்டும்போது முறிவு ஏற்பட்ட இடங்களிற் கட்டுவதோ இறுக்கிக் கட்டுவதோ கூடாது.

ஊறடைந்த பகுதி உராயாமலும் ஆடாமலும் தடுக்கும்வகையில் ஆதாரம் கொடுத்துக் கட்டிவிடுக.

மின்சாரத்தால் ஏற்பட்ட ஊறுகள்

1. மின்னோட்டத்தினை நிறுத்திவிடுக.

2. மின்னோட்டத்தினை நிறுத்திக்கொள்ளமுடியாவிடின், மின்னோட்டத்துடன் தொடர்பில்லாதபடி தாக்கப்பட்டவரை அப்புறப்படுத்திவைத்தல் வேண்டும். இவற்றுக்கு மிகுந்த கவனம் காட்டுதல் அவசியமாகும். தாக்கப்பட்டவரைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுபவர், கைகளையும் உடைகளையும் காக்கும்வகையில் இறப்பர்க் கைப்புட்டிகள், தடித்த புறச் சட்டைகள் போன்ற உலர்ந்த காவலிப் பொருள்களை உபயோகித்தல் வேண்டும். இயலுமாயின், பாதுகாப்பளிக்கும்போது இறப்பர்க் காலடிகொண்ட காலணிகளை உபயோகித்தல் வேண்டும். உலர்ந்த புதினத்தாட் கட்டிலும் மிதித்துக்கொண்டு நிற்கலாம்.

எச்சரிக்கை : உவோற்றளவு மிகக் கூடுதலாயிருந்தால் மின்னோட்டம் பவனத்தூடாகவோ காவலிக்கூடாகவோ நிலத்திற்குப் பாயும் அபாயம் உண்டு. அப்படிக்கொத்த சந்தர்ப்பங்களில் மின்னோட்டத்தை நிறுத்திவிடுவதுடன் பாதுகாப்புப் பணியினையும் பயிற்சி பெற்றவரொருவரிடம் விடுவது நல்லது.

3. வசதியானதொரு முறை வாயிலாகச் செயற்கைச் சுவாசம் அளிக்க. ஆபத்துக்குட்பட்டவர் சுவாசிக்காதிருந்தால் சிறிதும் தாமதித்தலாகாது.

வாயில் வாய் வைக்கும் முறை

ஆபத்துக்குட்பட்டவரை நிமிர்த்தி மேனேக்கிக் கிடக்கவைக்க. இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொள்க.

அவரின் நெற்றியிலே ஒரு கையை வைத்து தலையைப் பின்னேக்கி அமர்த்திக்கொண்டு, மற்றக் கையால் கீழ்த் தாடையை மேனேக்கியும் முன்னேக்கியும் தள்ளுக.

ஆபத்துக்குட்பட்டவரின் வாய்ச் சொண்டுகளுடன் அவற்றைச் சுற்றிவர உங்கள் வாய்ச் சொண்டுகளைப் பொருந்துமாறு வைத்துக்கொள்க.

மெல்லிய கைக்குட்டையொன்றினை இடையிலே போட்டுக் கொள்ளலாம். மூக்குத் துவாரங்களை மூடிக்கொண்டு, ஆபத்துக்குட்பட்டவரின் மூக்குத் துவாரங்களை உங்கள் கைவிரல்களால் நுள்ளுக.

சுவாசப்பைக்குள்ளே காற்றுப் புகுமாறு ஊதி மார்பு உயர்வதை அவதானிக்க, ஒவ்வொருமுறையும் ஊதிவிட்டு வாயை உயர்த்திக் கொள்க. நிமிடத்துக்கு 10 முறை ஊதுதல் வேண்டும். முதல் 6 முறையும் இயன்றவரை விரைவாகச் செய்யப்படுதல் வேண்டும்.

4. வைத்திய உதவியை நாடுக. வைத்திய உதவி பெறுவதற்கு முயன்றுகொண்டு செயற்கைச் சுவாசம் அளித்துவருக.

மூச்சடைப்பு

ஆபத்துக்குள்ளானவரை ஆபத்துக்குக் காரணமாயிருந்த பொருளிலிருந்து தொடர்பில்லாமல் விடுவித்து அகற்றிக்கொள்க.

பாதுகாப்பளிப்பவர் தாம் மூச்சடைப்புப் பெருதபடி தம்மையும் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.

செயற்கைச் சுவாசம் அளிக்கப்படுதல் வேண்டும். வைத்திய உதவியை நாடுதல் வேண்டும்.

8-562

---

## 1950 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கொழும்பு கப்பற்றுறை (நிர்வாக)ச் சட்டம்

அருமதுர நந்தசேன சில்வா குலசிங்க ஆகிய நான், கங்காணம் கமகே தொன் டேவிட் பதிறன்ன என்பவர் கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் பிரதி கப்பற்றுறை ஆணையாளராக (நிர்வாக)ப் பதவி வகிக்கும் அதே சமயத்தில், 1950 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கக் கொழும்பு கப்பற்றுறை (நிர்வாக)ச் சட்டத்தின் 18(2) ஆம் பிரிவு சேர்வாக 15(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வழக்குகள் தொடர அனுமதி வழங்குவதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கிறேன்.

அ. ந. சி. குலசிங்க,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு 1,
10.8.1970.

8-603

---

## சிறு கைத்தொழில் திணைக்களம்

1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ந் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 17 ந் திகதி வரைக்கும் இரு தினங்கள் உட்படலாக 180, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 ல் உள்ள சிறு கைத்தொழில் திணைக்களத்தின் "நூல் விற்பனை நிலையம்" இருப்புத் திட்டம் எடுப்பதற்காக மூடப்பட்டிருக்கும்.

எஸ். குணதிர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் திணைக்களம்.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 12 ந வ.

8–679

---

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டம்

### பிரிவு 11 (2) ன் கீழ் அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில், கீழ்வரும் ஏதேனுமொரு காரணத்திற்காக நெற்பயிர் நட்டமாயின் கட்டாய பயிர் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட காரணங்கள் :

(1) போதிய நீரின்மை
(2) வரட்சி
(3) நீர்த்தேக்கம்
(4) வெள்ளப்பெருக்கு
(5) பயிர் நோய்
(6) பயிர்ப்பூச்சி அரித்தல்
(7) காட்டுப்பன்றி
(8) காட்டு யானை
(9) அங்கீகரிக்கப்பட்ட பயிர்ச்செய்கை முறைகள்.

எஸ். பி. சேனநாயக்க,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கமத்தொழிற் சேவைப்பகுதி,
4, புள்ளேர்ஸ் லேன்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 28 ந வ.

8–684/1

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டம்

### பிரிவு 13 (3) (அ) ன் கீழ் அறிவித்தல்

1961 ம் ஆண்டின் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டத்தின் பிரிவு 13 ன் உபபிரிவு 3 (அ) ஆல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கமத்தொழிற் சேவை ஆணையாளர் செனவிரத்தின பண்டா சேனநாயக்க ஆகிய நான், நட்ட உத்தரவாதம் செய்யப்பட்டவர்கள் பின்பற்றவேண்டிய ஆகக்குறைந்த பயிர்ச்செய்கை முறைகளும், அங்கீகரிக்கப்பட்ட விசேட பயிர்ச்செய்கை முறைகளும், கீழ்வரும் அட்டவணையிற் காட்டியபடியென இத்தால் தீர்மானிக்கிறேன்.

எஸ். பி. சேனநாயக்க,
கமத்தொழிற்சேவை ஆணையாளர்.

கமத்தொழிற் சேவைப் பகுதி,
4, புள்ளேர்ஸ் லேன்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஜுலை மீ 28 ந் உ.

### அட்டவணை

**ஆகக்குறைந்த பயிர்ச்செய்கை முறைகள் :**

1. வரம் புகளையும் அணைகளையும் திருத்துதலும் பராபரித்தலும் ;
2. மூலப்பெயர்த்தலும் அல்லது உழுதலும் அல்லது சேறு மிதித்தலும் மட்டுப்படுத்தலும் ;
3. தூவி விதைத்தல் :
4. பயிரைப் பாதுகாத்தலும் கவனித்தலும் ;
5. நட்டம் ஏற்படுவதைத் தவிர்த்தலும் அல்லது குறைத்தலும் ;
6. அறுவடை செய்தல்.

**அங்கீகரிக்கப்பட்ட விசேட பயிர்ச்செய்கை முறைகள் :**

1. வரிசையில் விதைத்தல் அல்லது நாற்றுநடுதல் அல்லது வரிசையாக நாற்றுநடுதல்;
2. அங்கீகரிக்கப்பட்ட உரம் பாவித்தல் ;
3. களை பிடுங்கல் அல்லது நாசினி பாவித்தல், அல்லது பரம்படித்தல்.

8–684/2

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* **அரசாங்க பிரசுராலய அதிபர். தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** *என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.* **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.